செய்தி வெளியீடு எண்: 344 நாள் : 14.07.2016

ஒரு நாட்டின் மனித வளர்ச்சி குறியீட்டு அளவினை நிர்ணயிப்பதிலும், ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்கு தூண்டுகோலாக திகழ்வதிலும் மக்களின் உடல்நலன் முக்கிய பங்கு வகிக்கிறது. தமிழ்நாட்டில் அனைத்து மக்களும், குறிப்பாக ஏழை எளிய மக்கள், தரமான மருத்துவ சேவை பெற்றிட வேண்டும் என்ற அடிப்படையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு, புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களை ஏற்படுத்துதல், ஒவ்வொரு வட்டாரத்திலும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்துதல், அரசு மருத்துவமனைகளுக்கு நவீன மருத்துவக் கருவிகள் வழங்குதல், கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், தேவையான மருத்துவர்கள், மருத்துவம் சார்ந்த மற்றும் மருத்துவம் சாராத பணியாளர்களை நியமித்தல், எளிதில் அணுக முடியாத பகுதிகளில் வாழும் மக்களுக்கு அவர்கள் வசிக்கும் இடத்திற்கு அருகிலேயே தரம் வாய்ந்த மருத்துவ வசதிகள் கிடைக்க நகரும் மருத்துவமனைகள் ஏற்படுத்துதல், தொழில் நுட்ப வளர்ச்சியினை பயன்படுத்தி உயர்தர மருத்துவ வசதிகளை வழங்குதல், உயரிய மருத்துவ சிகிச்சை தேவைப்படுவோர் எவ்வித கட்டணமுமின்றி சிகிச்சை பெறும் வகையில் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தை செயல்படுத்தல், அம்மா முழு உடல் பரிசோதனை, அம்மா சிறப்பு மகளிர் முழு உடல் பரிசோதனை, அம்மா மகப்பேறு சஞ்சீவி, அம்மா குழந்தை நலப் பரிசு பெட்டகம், அம்மா ஆராக்கியத் திட்டம், பேருந்து நிலையங்களில் பாலூட்டும் தாய்மார்களுக்கு தனி அறைகள், தாய்ப்பால் வங்கி, சானிடரி நாப்கின்கள் வழங்கும் திட்டம் என பல்வேறு முன்னோடித் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

மக்கள் உடல் நலன் காக்கும் வகையிலான நல்வாழ்வுத் திட்டங்களை திறம்பட செயல்படுத்திட, தேவையான மருத்துவர்கள் இருப்பது அவசியமாகும். எனவே தான், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு ஆண்டுதோறும் ஒரு புதிய அரசு மருத்துவக் கல்லூரியை ஏற்படுத்தி வருகிறது. கடந்த 5 ஆண்டுகளில் சிவகங்கை, திருவண்ணாமலை மற்றும் சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகம் ஆகிய இடங்களில் மூன்று மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இந்த மருத்துவக் கல்லூரிகள் ஒவ்வொன்றிலும் ஆண்டுதோறும் 100 மாணவர்கள் மருத்துவ பட்டப்படிப்புகளில் சேர்க்கப்படுகின்றனர். மேலும், கடந்த ஐந்து ஆண்டுகளில் ஏழு அரசு மருத்துவக் கல்லூரிகளில் கூடுதலாக 410 மருத்துவ பட்டப்படிப்பு இடங்களுக்கு இந்திய மருத்துவக் குழுமத்தில் அனுமதி பெறப்பட்டு மாணவர்கள் பட்டப்படிப்பில் சேர்க்கப்படுகின்றனர். இந்த ஆண்டு, கோயம்புத்தூர் தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவமனை மற்றும் அரசு மருத்துவக் கல்லூரியில் 100 மாணவர்கள் சேர்க்கையுடன் மருத்துவ படிப்பு தொடங்க மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டு மாணாக்கர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். அதாவது, கடந்த ஐந்தாண்டுகளில் 810 மருத்துவ பட்டப்படிப்பு இடங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் உத்தரவின்படி, கரூர் மற்றும் புதுக்கோட்டையில் தலா 150 மருத்துவ மாணவர்கள் சேர்க்கையுடன் புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்த இரண்டு இடங்களிலும் புதிய மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்கு தேவையான கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய கட்டடங்கள் கட்டவும், மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அமைக்கவும் தலா 229 கோடியே 46 லட்சம் ரூபாய்க்கு நிர்வாக ஒப்புதலும், நிதி ஒப்பளிப்பும் வழங்கப்பட்டுள்ளது. புதுக்கோட்டையில் புதிய அரசு மருத்துவக் கல்லூரி 2017-18-ஆம் கல்வியாண்டு முதல் 150 மாணவர்கள் சேர்க்கையுடன் தொடங்க கட்டடப்

பணிகள் நடைபெற்று வருகின்றன. இதற்கான ஆயத்தப் பணிகளை மேற்கொள்ள ஒரு சிறப்பு அலுவலர் / முதல்வர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

கோயம்புத்தூர் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை மற்றும் அரசு மருத்துவக் கல்லூரிக்கு தேவையான பேராசிரியர்கள், இணைப் பேராசிரியர்கள், உதவிப் பேராசிரியர்கள், செவிலியர்கள், மருத்துவம் சார்ந்த பணியாளர்கள் மற்றும் மருத்துவம் சாரா பணியாளர்கள் என 808 புதிய பணியிடங்கள் ஏற்படுத்திட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இந்த கூடுதல் பணியிடங்கள் ஏற்படுத்தப்படுவதால் அரசுக்கு தொடர் செலவினமாக ஆண்டு ஒன்றுக்கு சுமார் 39 கோடியே 68 லட்சம் ரூபாய் செலவாகும்.

மேலும், புதுக்கோட்டையில் தொடங்கப்பட உள்ள அரசு மருத்துவக் கல்லூரிக்கு முதற்கட்டமாக பேராசிரியர்கள், இணைப் பேராசிரியர்கள், உதவிப் பேராசிரியர்கள், செவிலியர்கள், மருத்துவம் சார்ந்த பணியாளர்கள் மற்றும் மருத்துவம் சாராத பணியாளர்கள் என 161 புதிய பணியிடங்களை ஏற்படுத்திட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இந்த கூடுதல் பணியிடங்கள் காரணமாக, அரசுக்கு தொடர் செலவினமாக ஆண்டு ஒன்றுக்கு சுமார் 8 கோடியே 87 லட்சம் ரூபாய் செலவாகும்.

அதாவது, கோயம்புத்தூர் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை, அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் புதுக்கோட்டையில் தொடங்கப்பட உள்ள அரசு மருத்துவக் கல்லூரி ஆகியவற்றுக்கு 969 புதிய பணியிடங்கள் ஏற்படுத்திட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இப்புதிய பணியிடங்கள் ஏற்படுத்தப்படுவதன் காரணமாக, அரசுக்கு ஆண்டொன்றுக்கு, சுமார் 48 கோடியே 55 லட்சம் ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும்.

* * * * *

**வெளியீடு:- இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9.**
**நாள்:- 14.7.2016.**